பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 295

வியாழக்கிழமை
18 செப்ரெம்பர் 2025

புரட்டாதி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056



காஸாவில்

# இலங்கையைப் பார்த்தே இஸ்ரேலும் அட்டூழியம்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கை

**கொழும்பு, செப்ரெம்பர் 18**

**இலங்கையில் 16 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த, மனித உரிமை மீறல்கள் மற்றும் பேரவலங்கள்தான் காஸாவில் தற்போது நிகழ்ந்துகொண்டிருக்கும் மனித உரிமை மீறல்களுக்கு முன்னோடியாக உள்ளன என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.**

☞ 11



படம் - ஐ.சிவசாந்தன்

# யாழ்.நகரில் கடும்மழை மந்திரிமனைக்கு சேதம்

## இடிந்தது ஒருபகுதி

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்ப்பாணத்தில் நேற்றுப் புதன்கிழமை பெய்த கன மழை காரணமாக தொல் பொருள் சின்னமான நல் லூர் மந்திரிமனையின் ஒரு பகுதி இடிந்து விழுந் துள்ளது.

யாழ்ப்பாண இராசதானியை ஆண்ட சங்கிலிய மன்ன னின் மந்திரி மனை

☞ 11

# கஞ்சா வியாபாரி கைது

விரிவு பக்:- 05

# இனப்பிரச்சினை எதுவும் இலங்கையில் இல்லை!

## ஜெனிவாவில் 'ரீல் விட்ட' இலங்கைப் பிரதிநிதி

கொழும்பு, செப். 18

இலங்கையில் இனப்பிரச்சினைகள் எது வும் இல்லை. மாறாகப் பயங்கரவாத மோதலே நடைபெற்றது. எனவே, அதைத் தீர்ப்பதற்குப் பொறிமுறைகள் தேவை யில்லை என்று இலங்கையின் பிரதி வதி விடப் பிரதிநிதி தெரிவித்துள் ளார்.

☞ 11

# கம்மன்பிலவின் மனுமீது செப். 24இல் விசாரணை



கொழும்பு, செப். 18

முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் 24ஆம் திகதி விசாரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

☞ 11



# பெரும் எதிர்பார்ப்புக்குள் செம்மணி வழக்கு இன்று

யாழ்ப்பாணம், செப். 18

அரியாலை செம்மணி மனிதப் புதைகுழி தொடர் பான வழக்கு விசாரணைகள் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் இன்று இடம்பெறவுள்ளன. செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான

☞ 11



2025ஆம் ஆண்டுதான்

# இலங்கைக்கு திருப்புமுனை

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, செப்ரெம்பர் 18

இலங்கை இன்று ஒரு வலு வான பொருளாதார அடித் தளத்தைக் கொண்ட நாடாக மாறிவருகிறது. 2025ஆம் ஆண்டு நாட் டின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் வளர்ச்சி யின் திருப்புமுனையாக அமைந்துள்ளது என்று ஜனாதிபதி அநுர தெரிவித் துள்ளார்.

கொழும்பில் நேற்று நடை பெற்ற அதிவேக நெடுஞ்சா லையின் நிர்மாணப் பணி களில் ஜனாதிபதி அநுர கலந்துகொண்டு உரையாற்றி

☞ 11

முச்சந்தி முரளி

'முந்திப் புதைஞ்சதெல்லாம் இப்பதான் வெளில வாற காலம் கண்டியளோ'

கிளிநொச்சி

# இராமநாதபுரத்தில் மீட்கப்பட்டது ஷெல்

கிளிநொச்சி, செப். 18

கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதி யில், 1990ஆம் ஆண்டுகாலப் பகுதிக்குரிய வெடிக்காத ஷெல் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் பத்து வீட்டுத்திட்டப் பகுதியில் உள்ள தனி யார் காணியொன்றை

☞ 11

நல்லூரில் திலீபனை

# அஞ்சலிக்கச் சென்ற அமைச்சரை திருப்பியனுப்பியது ஏற்பாட்டுக்குழு!

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் தியாகதீபம் திலீ பனின் அஞ்சலி நிகழ்வு கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அங்கு அஞ்சலி மேற்கொள்வதற் காகச் சென்ற அமைச்சர் சந்திரசேகர் இடைமறித் துத் திருப்பி அனுப்பப்பட் டுள்ளார்.

திலீபனின் நினைவிடத் துக்கு அமைச்சர் சந்திர சேகர் சென்றதும், அங்கு நின்ற பலர் அமைச்சரைச்

☞ 11

யாழ்ப்பாணத்தில் நிலவும்

# போக்குவரத்துக் குறைபாடுகள்; ஆராய்கிறார் அமைச்சர் பிமல்!



யாழ்ப்பாணம், செப். 18

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் தலை மையில் யாழ்ப்பாணத்தில் நிலவும் போக்குவரத்துக் குறை பாடுகள் தொடர்பான மாவட்ட ஒருங் கிணைப் புக்

☞ 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | கொவிசெத | ஹந்தஹரண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|---|
| திகதி | 17.09.2025 | 17.09.2025 | 17.09.2025 | 17.09.2025 | 17.09.2025 | 17.09.2025 | 17.09.2025 | 17.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4197 | 1264 | 0223 | 2303 | 5955 | 1985 | 0530 | 0071 |
| ஆங்கில எழுத்து | E | | S | T | J | W | J | |
| வெற்றி இலக்கினம் | | கன்னி | | | | | | விருட்சிகம் |
| சுப்பர் இலக்கம் | | | | 25 | | | | |
| வெற்றி இலக்கங்கள் | 03 15 38 49 | 14 29 30 47 | 2 2 0 1 | 29 45 60 60 | 3 8 7 3 9 1 | 52 53 57 58 | 7 3 9 1 | 20 35 45 52 |
| விசேட எழுத்து | E | | | | | W | | |

# இந்திய - இலங்கை உறவை எவராலும் பிரிக்கமுடியாது

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

**கொழும்பு, செப்.18**

**இந்திய - இலங்கை உறவு பல நூற்றாண்டுகளாக பேணப்பட்டுவருகின்றது. அண்டை நாடுகளாகவும், ஒரு குடும்பமாகவும் பிணைக்கப்பட்டுள்ளன. இந்த உறவை எவராலும் பிரிக்கமுடியாது என சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

இந்தியாவின் 79ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்காக இலங்கை - இந்திய சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கலாசார நிகழ்ச்சியும், இரவு விருந்தும் கடந்த திங்கட்கிழமை சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நடைபெற்றது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் தனுஜா ஆகியோரின் அழைப்பின் பேரில் அமைச்சர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார். அந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையர்களாகிய நாம் இந்தியாவின் சாதனைகள் குறித்து மகிழ்ச்சியடைகின்றோம். இந்திய இலங்கை உறவு பல நூற்றாண்டுகளாக பேணப்பட்டு வருகின்றதுகலாசார நிகழ்ச்சிகள், கல்வி நடவடிக்கைகள் உட்பட பல துறைகள் மூலம் இந்த நட்பைப்பாதுகாப்பதில்இலங்கை-இந்திய சமூகம் மதிப்புமிக்க பங்கைக் கொண்டுள்ளது.

இந்தியாவின் அண்டை நாடுகளுக்குமுன்னுரிமைக்கொள்கை மற்றும் இலங்கையின் பிராந்தியஈடுபாடு போன்ற விடயங்கள் மூலம், இலங்கையும், இந்தியாவும் பொதுவான சவால்களை எதிர்கொள்வதில் தோளோடு தோள் நிற்கின்றன. பிராந்தியத்தின் அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பை உறுதிசெய்யும் பொறுப்பைப் பகிர்ந்து கொள்கின்றன.

இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சி முயற்சிகளில் இந்தியா ஒரு முன்னணிப் பங்காளியாக உள்ளது. மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான இன மற்றும் கலாசார உறவுகள் 2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கும் மேலானவை - என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 17.09.2025 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0663 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 1 2 0 2 7 9 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 17.09.2025 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2929 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கம் | 20 34 57 69 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 17.09.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 02 32 55 69 |
| வெற்றி வாரம் | 5090 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 17.09.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ரிஷபம் | |
| வெற்றி இலக்கம் | 17 27 46 53 |
| சீட்டிழுப்பு வாரம் | 4641 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 17.09.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கம் | 11 63 69 71 |
| வெற்றி வாரம் | 2105 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 17.09.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கம் | 19 22 47 53 |
| வெற்றி வாரம் | 2755 |

| JAYODA DLB | |
|---|---|
| திகதி | 17.09.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கம் | 06 18 52 57 |
| வெற்றி வாரம் | 2162 |




# பொலிஸ்மா அதிபர் சீனாவுக்குப் பயணம்

கொழும்பு, செப்.18

சீனாவில் நடைபெறும் பொலிஸ் மாநாட்டில் கலந்துக்கொள்வதற்காகப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். பதில் பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதய குமார வுட்லர் தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் கடந்த திங்கட்கிழமை இரவு சீனா பயணமாகியுள்ளார். அங்கு நடைபெறவுள்ள பொலிஸ் மாநாட்டில் அவர் உரையாற்றவுள்ளார். சீனப் பயணத்தை முடித்துக்கொண்டு நாளைமறுதினம் பொலிஸ்மா அதிபர் நாடு திரும்பவுள்ளார்.

பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்க, மத்திய மாகாணம் மற்றும் பொலிஸ் நிர்வாகப் பிரிவுக்குக்கு பொறுப்பாகச் செயற்படுகிறார். அவர் முன்னதாக நான்கு சந்தர்ப்பங்களில் பதில் பொலிஸ்மாஅதிபராகப் பணியாற்றியுள்ளார். (எ-இ)



# வெளிவிவகார அமைச்சரை அமெ. தூதுவர் சந்தித்தார்

கொழும்பு, செப்.18

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தை அமெரிக்க தூதுவர் ஜூலி சங் நேற்றுச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் எக்ஸ் தளத்தில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் பதிவில்,

நியாயமான, சமநிலையான வர்த்தகத்தை மேம்படுத்துதல் மற்றும் துறைமுகங்கள் முதல் பொது மக்கள் வரை அமெரிக்க இலங்கைப் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் தொடர்பில் கலந்துரையாடினோம். இந்தோ-பசுபிக் பங்காளர்களாக நாங்கள் பாதுகாப்பு மற்றும் திறந்த வர்த்தகத்தைப் பாதுகாக்கிறோம் - என்றுள்ளது. (ச-இ)

## சம்பத் மனம்பேரி சரணடைவு

கொழும்பு, செப்.18

மித்தெனியவில் ஐஸ் போதைப்பொருள் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு கொள்கலன்களில் மூலப்பொருள்களை மறைத்துவைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட சம்பத் மனம்பேரி என்ற சந்தேகநபர் வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுச் சரணடைந்துள்ளார்.

சம்பத் மனம்பேரி நீண்டகாலம் பொலிஸ் கான்ஸ்டபிளாகவும், பின்னர் குறுகிய காலம் புலனாய்வுத்துறை அதிகாரியாகவும் செயற்பட்டிருக்கின்றார். அவர் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகக் களமிறக்கப்பட்டிருந்தார் என்று குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# ஐக்கிய மக்கள் சக்தி கலைக்கப்படமாட்டாது

## அஜித் பி பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, செப்.18

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கலைக்கப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைக்கப்படமாட்டாது என்று அந்தக் கட்சியின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்படவேண்டும் என்பது பெரும்பாலானவர்களின் கருத்து. இதனை நாமும் ஏற்கின்றோம். இணைவு என்பது இருதரப்புகளும் ஒரு கட்சியின்கீழ் சங்கமிப்பதா அல்லது கூட்டணியா என்பது பற்றி முடிவெடுக்கப்படவில்லை.

ஒருமித்த கருத்துடைய இரு தரப்புகளின் ஒற்றுமையென்பது மிக முக்கியம். பிரிந்திருந்ததால்தான் ஜனாதிபதித் தேர்தலில் எமக்குப் பின்னடைவு ஏற்பட்டது. ரணில் விக்கிரமசிங்க எமது அரசியல் குரு. அவரைக் கைதுசெய்தபோது நாம் கவலை அடைந்தோம். ஐக்கிய மக்கள் சக்திக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். எனவே, ஐக்கிய மக்கள் சக்தி கலைக்கப்படமாட்டாது. இணைவு பற்றிப் பேசப்பட்டுவருகின்றது-என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாண்டுக்குள் இலங்கையில் வேலையின்மை தீவிரமடையும்

## உலக வங்கி எச்சரிக்கை




கொழும்பு, செப்.18

**இலங்கையில் அடுத்த பத்தாண்டுக்குள் வேலையின்மைப் பிரச்சினை தீவிரம் அடையும். வேலை வாய்ப்புகளை உருவாக்க தனியார்துறை வளர்ச்சியை ஊக்குவிப்பது அவசியம் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அதன் துணைத் தலைவர் ஜோஹன்னஸ் ஜுட் தெரிவிக்கையில்,

இலங்கையில் அடுத்த பத்தாண்டுகளில் 10 இலட்சம் பேர் புதியதாக தொழிலாளர் படையில் இணையவுள்ளனர். ஆனால், அதே காலப்பகுதியில் வெறும் மூன்று இலட்சம் வேலைவாய்ப்புகளே புதிதாக உருவாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இது இலங்கையில் எதிர்காலத்தில் வேலையின்மை பிரச்சினை தீவிரமடையக்கூடும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இந்தச் சவாலைச் சமாளிக்க, வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்கள் அத்தியாவசியமாகின்றன.

மேலும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும், தனியார் முதலீட்டை ஈர்க்கும் மற்றும் முக்கியமான துறைகளை நவீனமயமாக்கும் சீர்திருத்தங்களை செயற்படுத்துவதில் அரசாங்கத்துக்குத் தொடர்ந்து ஆதரவளிப்போம்- என்றார்.

இதேவேளை உலக வங்கி இலங்கைக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது. இந்த நிதி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் விவசாயம் போன்ற துறைகளில் முதலீடு செய்யப்படவுள்ளது. (ச-இ)

## சுகவீன விடுவிப்பில் குதித்த மின்சாரசபை ஊழியர்கள்

கொழும்பு, செப்.18

இலங்கை மின்சாரசபையின் ஊழியர்கள் நேற்றுப் புதன்கிழமை சுகவீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இது "வேலைக்கு ஏற்ற ஊதியம்" என்ற கோரிக்கையை வலியுறுத்தி நடைபெறும் போராட்டத்தின் இரண்டாம் கட்டம் என மின்சாரசபைத் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் கோசல அபேசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தங்களின் கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்றாததால், இந்தச் சுகவீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுத்ததாகத் தொழிற்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-இ)




## எரிபொருள் சேமிப்பு அதிகரிக்கத் திட்டம்!

கொழும்பு, செப்.18

நாட்டின் எரிபொருள் சேமிப்புத் திறனை அதிகரிக்க 6 புதிய எரிபொருள் தொட்டிகளை நிறுவும் பணிகளைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் டி.ஜே. ராஜகருணா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய கடந்த காலங்களில் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்த எரிபொருள் தொட்டிகளின் கட்டுமானப்பணிகளை மீண்டும் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## இ.போ.ச. சேவையில் பெண்கள் உள்ளீர்ப்பு



கொழும்பு, செப்.18

இலங்கை போக்குவரத்துச் சபையின் பொதுப் போக்குவரத்துச் சேவையில் விரைவில் பெண் சாரதிகளும் நடத்துநர்களும் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள இ. போ.ச. சாலைப்போக்குவரத்துப் பணிமனைகள் பல குறைபாடுகளுடன் காணப்படுகின்றன. இருப்பினும், 25 பஸ் டிப்போக்களை நவீனமயமாக்க ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஊழியர்களின் தற்போதைய பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய 750 புதிய சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## நிதிப் பிரச்சினையைத் தீர்க்க சிறப்பு மத்தியஸ்த சபைகள்!

கொழும்பு, செப்.18

நீதிமன்றங்களின் வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கில், நிதிப் பிரச்சினைகளுக்காக, சிறப்பு மத்தியஸ்த சபைகளை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முதற்கட்டமாக கொழும்பு, கம்பஹா, அநுராதபுரம், பொலன்னறுவை, கண்டி மற்றும் மொனராகலை மாவட்டங்களில் நிதிப் பிரச்சினைகளுக்காக சிறப்பு மத்தியஸ்த சபைகள் நிறுவப்படும். 2025 வரவு - செலவுத் திட்டத்தில் மத்தியஸ்த சபை ஆணையத்துக்கு ஒரு பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது- என்றார். (ச-இ)




## கட்டடமும் கட்டுப்பாடுகளும்

நாய்க்கு எங்க கல்லெறிபட்டாலும் காலைத்தான் நொண்டுமாம். ஏனெண்டால் அதுக்குக் காலிலதான் நெடுக கல்லடிபடும். அதால எங்க நொந்தாலும் காலில தான் அடிபட்டிருக்கு எண்ட நினைப்பில அது காலைத்தான் நொண்டும் எண்டு சொல்லுவினம். அதைமாதிரி, உந்தத் தொல்லியல் திணைக்களமும் காப்பாத்தவேண்டிய தொல்லியல் சின்னங்களைக் கைவிட்டுட்டு, அடாத்தா விகாரை கட்டுறதுக்கு நிலம் பிடிச்சுக் குடுக்கிற வேலையை மட்டும் ஒழுங்காச் செய்யிறதால, மரபுச்சின்னங்கள் எங்க அழிஞ்சாலும், "உது தொல்லியல் திணைக்களத்தின்ர அலட்சியத்தாலதான் நடந்தது" எண்டு எல்லாரும் ஈஸியாக் கையைக் காட்டுகினம். நேற்றுப் பெய்த மழைக்கு, நல்லூர் மந்திரிமனையின்ர ஒருபக்கம் இடிஞ்சு விழுந்ததுக்கும் எல்லாரும் உடன தொல்லியல் திணைக்களத்தைத்தான் பழி சொன்னவை. ஆனால் பரிதாபம் என்னவெண்டால், இந்த விசயத்தில தொல்லியல் திணைக்களத்தில மட்டும் முழுப்பழியையும் சுமத்தேலாது. இன்னும் வடிவாச் சொல்லப்போனால், அந்தக் கட்டடம் இருக்கிற காணிக்கு உரிமையுள்ளவரின்ர விடாப்பிடிக்குணத்தாலதான் அந்த மந்திரிமனை இப்பிடிச் சிதிலமடைஞ்சு, ஒரு மழைக்குக்கூட நிண்டுபிடிக்கேலாமல் விழுகிற கட்டத்துக்கு வந்திருக்காம்.

உந்த மந்திரிமனையை அழிவில இருந்து காப்பாத்தி, அதை ஒரு மரபுரிமைச்சின்னமாப் பேணி, வெளியாக்களும் வந்து பாக்கிறமாதிரி மீளுருவாக்கம் செய்யச் சொல்லிக் கனபேர் கோரிக்கை வைச்சவை. அதுக்கேத்தபடி சில நடவடிக்கையளும் எடுக்கப்பட்டது. பருத்தித்துறையில இருக்கிற தெருமூடி மடத்தை எப்பிடி அதின்ர பழமை கெடாமல் அப்பிடியே திரும்பப் புனரமைச்சினமோ அப்பிடி இந்த மந்திரிமனையையும் புனரமைக்கிறதுக்கு தொல்லியல் திணைக்களமும் வேலையில இறங்கினது. ஆனால் மந்திரிமனை இருக்கிற வளவின்ர உரிமையாளர் "அது அழிஞ்சாலும் பரவாயில்லை. அதைக் கட்டுறம், நிமித்திறம் எண்டு ஆரும் காணிக்குள்ள கால்வைக்கக்கூடாது" எண்டு விடாப்பிடியா நிண்டிருக்கிறார். அதாலதான் தொல்லியல் திணைக்களத்தாலையும் ஒண்டும் செய்யேலாமல் கிடக்காம். மந்திரிமனையைப் புனரமைக்கிறதுக்கெண்டு வந்த அம்பது லட்சம் ரூபாவையும் இந்தப் பிரச்சினையால திருப்பி அனுப்பிப்போட்டினமாம். அதுக்குப் பிறகுதான், உந்த மந்திரிமனைக்குக் கிட்ட இருக்கிற சங்கிலியன் தோரணவாசலைத் தொல்லியல் திணைக்களம் புனரமைச்சது எண்டு விசயம் தெரிஞ்சவை சொல்லுகினம்.

என்னதான் தொல்லியல் திணைக்களம், இந்த மந்திரிமனையின்ர ஒருபக்கம் இடிஞ்சு கொட்டுண்ட விசயத்தில தனியாரின்ர சொத்து எண்டும், அனுமதியில்லை எண்டும் காரணத்தைக் காட்டி "ஐயாம் பாவம்" எண்டு சொல்லித் தப்ப வெளிக்கிட்டாலும், இன்னொரு கேள்வியும் சனத்திட்ட இருக்குது. தையிட்டிவிகாரை தனியாரின்ர காணிக்குள்ளதான் அடாத்தாக் கட்டுப்படுகுது. ஆனால் அதுக்கு ஆரும் எந்த நடவடிக்கையுமெடுக்கேலையே. அதோட குருந்தூரில விகாரையைக் கட்டக்கூடாது எண்டு நீதிமன்றம் உத்தரவு போட்டும் அது தொல்லியல் திணைக்களத்தின்ர ஆசியோட கட்டுப்பட்டபடிதானே இருக்குது. அங்கையெல்லாம் தனியார் சொத்து, நீதிமன்றக் கட்டளை எண்டு தொல்லியல் திணைக்களமும், அரசாங்கமும் கையைக் கட்டிக்கொண்டு இருக்கேலையே. தங்கட தேவைக்காக அடாத்தா, அநியாயம் செய்யேக்க மட்டும் உவையளுக்கு நீதிமன்றமோ இல்லாட்டி தனியார் சொத்தோ கண்ணுக்குத் தெரியாது. ஆனால் தமிழரின்ர இருப்பை நிரூபிக்கிற மரபுரிமைச் சின்னமெண்டு வரேக்க மட்டும் சட்டம், சம்பிரதாயம் எண்டு தட்டிக்கழிக்கினம் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். வெளியூரில் அமைந்திருக்கும் பிரசித்திபெற்ற கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பும் சிலருக்கு ஏற்படும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**இடபம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்துமுடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தைவழி உறவுகள் கேட்கும் உதவியைச் செய்து கொடுப்பீர்கள்.

**கடகம்:** பிற்பகலுக்குமேல் தொடங்கும் முயற்சி சாதகமாகமுடியும். பிள்ளைகள்வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பெரிய பாதிப்பு எதுவுமிருக்காது. சகோதரர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளைக் காலையிலேயே தொடங்கிவிடுவது சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வெளியூர்ப்பயணங்களால் ஆதாயம் ஏற்படும்.

**துலாம்:** பிற்பகலுக்குமேல் மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாளாக இருக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சகோதரவகையில் ஆதாயம் ஏற்படும்.

**தனுசு:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்குமேல் மனதில் சற்றுக் குழப்பம் ஏற்படக்கூடும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் இருந்தாலும் செயல் அளவில் ஒன்றுமில்லை.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சிதரும். அதேநேரம் திடீர்ச்செலவுகளும் ஏற்பட்டு திக்குமுக்காடவைக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் இருந்து வந்த இழுபறிநிலை மாறி, அனுகூலமாகமுடியும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உங்கள் பொறுப்புகளை வாழ்க்கைத்துணை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு சகோதரர்களால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு நவீன டிசைனில் புதிய ஆடைகளை வாங்கும் யோகம் ஏற்படும்.

# வேலைவாய்ப்புத் திணைக்கள விசேட தொழிற்சந்தை யாழில்

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் மாவட்டத் தொழில் நிலையம் யாழ். மாவட்டச் செயலக வளாகத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை விசேட தொழிற்சந்தை நிகழ்வை நடத்தவுள்ளது.

நிகழ்வில் 40க்கு மேற்பட்ட தொழில் வழங்கும் நிறுவனங்கள் கலந்துகொண்டு தமக்கான ஆளணியினரைத் தெரிவுசெய்யவுள்ளனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள், கணினித்துறை, ஹோட்டல் முகாமைத்துவம், கணக்கியல், ஆடைத்தொழில், காப்புறுதித்துறை, நிர்மாணத்துறை, சிறுதொழில் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு நிறுவனங்கள், அரச தொழிற்பயிற்சி நிறுவனங்கள், தனியார் மருத்துவத்துறை போன்ற பல நிறுவனங்கள் தொழிற்சந்தையில் பங்குபெறவுள்ளன. ஆர்வமுள்ள இளைஞர்கள், யுவதிகள் நிகழ்வில் கலந்துகொண்டு தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலதிகத் தகவல்களுக்கு மாவட்டத் தொழில் நிலையத்தில் நேரடியாகவோ அல்லது 0212219359 எனும் அலுவலகத் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், செப்.18

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான 39 ஆவது வருடாந்த நாராயண மஹோற்சவம் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவத்தில் எதிர்வரும் முதலாம் திகதி காலை பத்துமணிக்குத் தேர்த்திருவிழாவும் இரண்டாம்திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று மாலை கொடியிறக்கத்துடன் மஹோற்சவம் நிறைவுபெறும். (ச-20)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.18

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கட்டுடை பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படவுள்ளதாக விவசாய சம்மேளனத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (ச-41-27)





# தேசியமட்டப் பளுதூக்கல்; மன்னார் மாணவி சாதனை

மன்னார், செப்.18

அகில இலங்கைப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தேசியமட்ட 15 வயதுப் பிரிவுக்குட்பட்ட பெண்களுக்கான பளுதூக்குதல் போட்டியில் மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி மாணவி சம்சிக்கா சத்தியசீலன் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். இவரது பயிற்றுவிப்பாளராக மாவட்ட மெய்வல்லுனர் பயிற்றுநர் ஜூலியட் சிலிடாஸ் செயற்பட்டுள்ளார். (ச-41-56)

வறுமை ஒழிப்புச் செயற்றிட்டத்தின் சமூக சக்தி வேலைத்திட்டம் தொடர்பிலான கருத்தரங்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. வளவாளராக ஜனாதிபதி செயலகத்தின் சிரேஸ்ட உதவிச் செயலாளர் சாரதாஞ்சலி மனோகரன் கலந்து சிறப்பித்தார். (ச-25, 113)



# நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், செப்.18

விசுவாவசு வருட நவராத்திரி விழா எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி ஒக்ரோபர் 2ஆம் திகதி வியாழக்கிழமை வரை 11 நாள்கள் இடம்பெறவுள்ளது.

நவராத்திரி விழாவில் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை வீரத்தை வேண்டி துர்க்கையையும், 26ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை செல்வத்தை வேண்டி லக்சுமியையும், 29ஆம் திகதி முதல் 1ஆம் திகதி வரை கல்வியைவேண்டி சரஸ்வதியையும் வழிபடுவதாக அமைகிறது. முதலாம் திகதி ஆயுத பூஜையும் மறுநாள் 2ஆம் திகதி விஜயதசமியுடன் நவராத்திரிவிழா நிறைவடையும். (ச-41-100)

# 'பொம்மை' திரைப்படம் சிறப்புக்காட்சி இன்று

யாழ்ப்பாணம், செப்.18

இளம் இயக்குநர் நவயுகா குகராஜாவின் இயக்கத்தில் உருவான 'பொம்மை' திரைப்படத்தின் சிறப்புக்காட்சி யாழ். றீகல் (கார்கில்ஸ்) திரையரங்கில் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு திரையிடப்படவுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை முதல் நாடுமுழுவதும் திரையிடப்படவுள்ளன. இந்தத் திரைப்படத்தின் படப்பிடிப்பு வன்னிப்பிரதேசம், யாழ். மாவட்டத்தின் புன்னாலைக் கட்டுவன், வயாவிளான் ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-25)

# வேலைவாய்ப்புக்காக 2000 பேர் வரை பதிவு!

*யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம் செப்.18

யாழ்.மாவட்டச் செயலக மனிதவள வேலைவாய்ப்புத் திணைக்களத்தில் இதுவரை 2 ஆயிரம் பேர் வரை வேலைவாய்ப்புகளை எதிர்பார்த்துப் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என்று யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

தொழில் அமைச்சின் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களமும், யாழ்.மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்தும் விசேட தொழிற்சந்தை நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது. குறித்த விசேட தொழிற்சந்தை தொடர்பாகப் பங்குதாரர்களுடனான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். (ச- 40,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

எல்லைகள் என்பவை பயத்தைப்போன்றே பெரும்பாலும் ஒரு மாயை.

– மைக்கேல் ஜோர்டன்–

# அனுபவ ரேகைகளின் அவலம்..!


தமிழர் தாயகத்தில் - குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக முதியோர் தவறான முடிவெடுத்துத் தங்களின் உயிரை மாய்த்துக்கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்துவருகின்றன. மறுபுறம் உருக்குலைந்த நிலையில் முதியவர்கள் சடலங்களாக மீட்கப்படுவதும் அதிகரித்துச்செல்கின்றது. இந்த இரண்டு வகை துயரக் கதைகளின் அடிப்படை என்னமோ ஒன்றுதான். அதுதான் 'தனிமையும் மன அழுத்தமும்'. 'பலவீனர்கள்தான் தங்களின் உயிரை மாய்த்துக்கொள்கின்றனர்' என்று நாம் இலகுவாகக் கூறிவிட்டுக் கடந்துவிடுகின்றோம். எத்தனையோ சவால்களுக்கு மத்தியில் தங்களின் இளைமைப் பருவத்தைக் கடந்து குழந்தைகளைப் பெற்று அவர்களை ஆளாக்கி, வாழ்வெனும் பெருங்கடலில் நீந்திக் கரைசேர்ந்த பின்னர், அவர்கள் தவறான முடிவுகளை எடுத்து உயிர்மாய்ப்பது 'ஒற்றைச்சொல்' விடைக்கான விவாதப்புள்ளி அல்ல. மிகநீண்ட நுணுக்கமான ஆய்வுகள் இதில் மேற்கொள்ளப்படவேண்டும். இவற்றைத் தனிப்பட்ட சம்பவங்கள் என்று ஒதுக்கிவிடமுடியாது.

தற்கால உலகில் பிறப்புகளும், இறப்புகளும் குறைகின்றன. அதுதான் இன்றைய உலகின் பொதுவான போக்கு. மனிதர்களின் ஆயுட்காலம் ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளது. அதற்கு மருத்துவ உலகின் மகிமைத்துவமே பிரதான காரணம். இன்றைய உலகில் பத்தில் ஒருவர் 60 வயதுக்கு மேற்பட்டவர். 2050ஆம் ஆண்டில் இந்த சராசரி ஐந்தில் ஒருவராக மாறும் என்கின்றனர். அதாவது உலக மக்கள் தொகையில் 210 கோடிப் பேர் முதியவர்களாக இருக்கப்போகின்றனர். நெற்றியில் வீழ்ந்த அனுபவ ரேகைகள் ஆசீர்வதிக்கப்பட்டவை. எனவே, ஒருவகையில் கொண்டாடித் தீர்க்கவேண்டிய புள்ளிவிவரம் இது. ஆனால், பெருந்துன்பத்தையும் பேரவலத்தையும் மனிதகுலம் எதிர்கொள்ளப்போகின்றது என்பதையே இந்தத் தரவுகள் சொல்லாமல் சொல்லி நிற்கின்றன.

வேகமாக மாறும் உலகில் 'வயதானவர்கள் ' தேவையற்றவர்கள் என்ற மனப்போக்கு மெல்லமெல்ல ஆழமாகப் பதிந்துவருகின்றது. பாகுபாடாகவும் அவமதிப்பாகவும் அவர்களை யாரும் எளிதாக நடத்திவிடமுடிகிறது. கூட்டுக்குடும்பத்தின் அடிவேராக, முதுசொம்களாக முதியவர்களைக் கொண்டிருந்த தமிழ்ச்சமூகம், இன்று அந்த அடிவேரை வெட்டியெறிந்துவிட்டு கிளைபரப்ப எத்தனிக்கின்றதா? என்ற கேள்விகளைத்தான் யாழ்ப்பாண முதியோர் பலரின் அவலச்சாவுகள் எழுப்புகின்றன. அதேநேரம், பெற்றோரைப் பிள்ளைகள் கைவிடுவது என்பது பழையகாலம்போலத் தனிப்பட்ட விவகாரம் கிடையாது. இன்று அதுவொரு சட்டப் பிரச்சினை. தனிப்பட்ட குடும்பங்களின் பிரச்சினைதான் முதியோர்கள் பராமரிப்பு என்று அரசும் தனது பொறுப்பைத் தட்டிக்கழித்துவிடமுடியாது. உலக சனத்தொகையைப் போன்று, இலங்கையிலும் முதியோரின் எண்ணிக்கை வேகமாக வளர்ந்துவரும் நிலையில், முதியோர் பராமரிப்புக்காக புதிய கட்டமைப்புகளையும் - மறுசீரமைப்புத் திட்டங்களையும் அரசாங்கம் விரைவாகப் பரிசீலிக்கவேண்டும். ஏனெனில், மூத்த குடிமக்களின் கண்ணியமான வாழ்க்கை, ஒரு சமூகத்தின் கண்ணியத்துக்கான அடையாளங்களில் ஒன்று!

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



# பொறுப்புக்கூறலை உறுதிசெய்ய சுயாதீன விசாரணை அவசியம்!

*அமெ.காங்கிரஸ் உறுப்பினர் தெரிவிப்பு*

**கொழும்பு, செப்.18**

**இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கு சுயாதீன விசாரணையைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கவேண்டும் என்று அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர் சம்மர் லீ தெரிவித்துள்ளார்.**

செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் தனது உத்தியோக பூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் பதிவிட்டிருக்கும் அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர் சம்மர் லீ, செம்மணியில் அடையாளங்காணப்பட்ட மனிதப்புதைகுழியில் 140க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகளுடன் குழந்தையின் பாற்போத்தல், பாடசாலைப் புத்தகப்பை, சிறுவர்கள் விளையாடும் பொம்மை என்பனவும் கண்டறியப்பட்டுள்ளன. இவை தொடர்பான நீதி மற்றும் பொறுப்புக்கூறலை நோக்கி நகர்வதற்கு நாம் சுயாதீன விசாரணையைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## ரூ.1,471 பில்லியன் குவித்தது சுங்கம்

கொழும்பு, செப்.18
கடந்த 8 மாத காலப்பகுதியில் இலங்கை சுங்கத்திணைக்களம் 1,471 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது.
கடந்த மாதத்தில் மாத்திரம் இலங்கை சுங்கத்துக்கு 244 பில்லியன் ரூபா வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.
அத்துடன், கடந்த ஜூன் மாதம் 200 பில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளதுடன் ஜூலை மாதம் 231 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## புறக்கோட்டையில் தோட்டாக்கள் மீட்பு

கொழும்பு, செப்.18
கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள உணவகக் கழிப்பறை குப்பைத் தொட்டியில் இருந்து 17 செயற்படுத்தப்படாத தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
யாரோ ஒருவர் கழிப்பறைக் குப்பைத்தொட்டியில் தோட்டாக்களை வைத்திருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கக் குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச-இ)

## கைதி உயிரிழப்பு

கொழும்பு, செப்.18
களுத்துறை சிறைச்சாலையில் உள்ள மரமொன்றில் ஏறிக் குதித்து காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த கைதி ஒருவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் அவர் சிறையிடப்பட்டிருந்தார். (ச-இ)

## நெல் கொள்வனவுக்கு ரூ.5,288 மில்லியன் செலவு



கொழும்பு, செப்.18
அரசாங்கத்தால் நாட்டின் 16 மாவட்டங்களில் இருந்து 43,891 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.
2025 ஆம் ஆண்டுக்கான நெல் கொள்வனவுக்காக அரசாங்கம் 6 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியநிலையில் தற்போது வரையில் 5,288 மில்லியன் ரூபாவைச் செலவுசெய்துள்ளது.
விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யும் திட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான மேலதிக நிதியை வழங்குவதற்கு அமைச்சரவையின் ஒப்புதல் கிடைத்துள்ளது என்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது. (ச-இ)

நாளை
வெள்ளிக்கிழமை - புரட்டாதி 3
19.09.2025
சுபநேரம் : 06.03 - 07.33
ராகுகாலம் : 10.33 - 12.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்கள் எல்லைமீறல்; வடக்கில் கட்டுப்படுத்தப்படவில்லை!

## கடற்றொழிலாளர் சமாச உபதலைவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப்.18

**வடக்குக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களது எல்லைதாண்டல் நடவடிக்கை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று கடற்படையினர் பொய்யுரைத்துள்ளனர் என்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சமாச உப தலைவர் நாகராசா வர்ண குலசிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.**

தொண்டைமானாற்றில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடற்படையினர் கொழும்பில் ஊடக சந்திப்பொன்றை நடத்தி, வடக்குக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளின் வருகை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 3 வாரத்தில் இந்திய மீனவர்களின் எல்லைதாண்டிய மீன்பிடி தடுக்கப்பட்டுள்ளது என்று அறிவித்துள்ளனர். இதுமுற்றிலும் பொய்யான கூற்று.

வடக்குக் கடற்பரப்புகளில் குறிப்பாக அனலைதீவு, நெடுந்தீவுப்பகுதிகளில் இந்திய மீனவர்களது அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்ந்தவண்ணமே உள்ளன - என்றார். (சு-100)



# பருத்தித்துறைத் துறைமுக அபிவிருத்தி மக்களைப் பாதித்தால் அனுமதியோம்

## நகரசபைத் தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.18

பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகம் அபிவிருத்தியால், மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுமானால், அந்தத் திட்டத்தை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்று பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் வின்சன் டீ போல் டக்ளஸ் போல் தெரிவித்துள்ளார்.

துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டால் அதனால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் விளக்கி, அதனைத் தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி, சுப்பர்மடம் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தினர், அவரிடம் கடந்த திங்கட்கிழமை மனுக்கையளித்தனர்.


மனுவைப் பெற்றுக்கொண்டபின் நகரசபைத் தவிசாளர் தெரிவிக்கையில்,

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட துறைமுக அபிவிருத்தி தொடர்பான கூட்டத்துக்கு எமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. மாவட்டச் செயலருக்கு இதுதொடர்பில் நேரில் தெரிவித்தேன். துறைமுக விடயத்துடன் தொடர்புடைய தரப்பினருடன் விரைவில் கலந்துரையாடல் நடத்தி, அவர்களது கருத்துகளைக் கேட்டறிந்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விடயங்களைத் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (சு-100)

# செம்மணிக்கு நீதிகோரி கையெழுத்துப் போராட்டம்

யாழ்ப்பாணம், செப்.18

செம்மணி உட்பட வடக்கு - கிழக்கில் காணப்படும் மனிதப் புதைகுழிகளுக்கும், இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கும் சர்வதேச நீதி கோரிய கையெழுத்துப்போராட்டம் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மருதனார்மடப் பகுதியில் இடம்பெற்றது. மாற்றத்துக்கான இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற போராட்டத்தில் வர்த்தகர்கள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கையெழுத்துகளை பதிவுசெய்து போராட்டத்துக்கு வலுச்சேர்த்தனர். (ச-66)



# ஆட்கடத்தலில் கைவிடப்பட்ட இலங்கையர்கள் மீட்பு

மன்னார்,செப்.18

சட்டவிரோதமாக இலங்கையை விட்டு வெளியேற முயன்று ஆட்கடத்தல்காரர்களால் கைவிடப்பட்டனர் என்று சந்தேகிக்கப்படும் இலங்கையைச் சேர்ந்த அறுவர் தலைமன்னார், மணல்திட்டைச் சுற்றிய கடற்பரப்பில் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

வடமத்திய கடற்படைக் கட்டளைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் அவர்கள் மீட்கப்பட்டனர். இவர்கள் வவுனியா, மடு மற்றும் கொக்கடிச்சோலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளுக்காக அவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படையினரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (சு-213)



# காப்பெற் வீதியாகும் இலந்தைக்குளம் வீதி!

யாழ்ப்பாணம், செப்.18

யாழ்ப்பாணம் அரியாலை - இலந்தைக்குளம் வீதியைக் காப்பெற் வீதியாக மாற்றும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இலங்கை முழுவதும் பெருந்தெருக்கள் அமைச்சினால் அமைக்கப்படும் 100 வீதிகள் வேலைத்திட்டத்தின்கீழ் 890 மீற்றர் நீளமான இலந்தைக்குளம் வீதி 21.5 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் குரூஸ் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ச-20,17)

## புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு

### இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்

ச.சானுஜா - 165, மோ.விதேஷ் - 150, த.ஸஷ்வின் - 150, பி.கிஷாவ்னா - 144, கே.கபிஷ்கா - 138, தி.அக்ஷ்யன் - 133


# கொழும்புத்துறை இந்து ம.வி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப்.18

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலத்தின் பரிசளிப்பு விழா சிவயோக சுவாமிகள் மண்டபத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் கே.தவகீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன், சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் சி. மதியழகன் ஆகியோர் கலந்து கொள்வர். (ச-25, 17)

### துன்னாலை வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை

பி.வர்மிகன் 154, கு.வர்சிகா 153, லோ.சோபிதன் 151, தி.கிருஷிகன் 140, வ.தேனிகா 133, சி.சிவாத்மிகா 130



# பூதர்மடம் வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், செப்.18

நீர்வேலி தெற்கு பூதர்மடம் வீதியைப் புனரமைக்கும் பணிகள் வலி.கிழக்குப் பிரதேசசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நீண்டகாலமாக சேதமடைந்திருந்த குறித்த வீதியின் புனரமைப்பு நடவடிக்கைகளின் ஆரம்பநிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ச-25, 17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுநீரக நோய் காரணமாக தினமும் ஐவர் உயிரிழப்பு!

நாட்டில் சிறுநீரக நோய்கள் காரணமாக ஆண்டுதோறும் சுமார் ஆயிரத்து 600 பேர் உயிரிழக்கின்றனர். இதன்படி, ஒவ்வொரு நாளும் சராசரியாக ஐவர் உயிரிழக்கின்றனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் மேலும் தெரிவித்ததாவது:

நாள்பட்ட சிறுநீரக நோய் மற்றும் நீண்ட கால சிறுநீரக செயலிழப்பு ஆகியவை சிறுநீர் வெளியேற்றத்தைக் குறைத்து உடலில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. இதனால் உடலில் பல உபாதைகள் ஏற்படுகின்றன.

சிறுநீரக நோய் இரத்த சிவப்பணு உற்பத்தியையும் சீர்குலைக்கிறது. விற்றமின் டி அளவைக் குறைக்கிறது மற்றும் இரத்த அழுத்த ஒழுங்குமுறையிலும் தாக்கத்தை செலுத்துகின்றது. தற்போதைய புள்ளிவிவரங்கள் தொடர்ந்தால், 2050ஆம் ஆண்டளவில், சிறுநீரக நோய்கள் உலகளவில் மரணத்துக்கு ஐந்தாவது பிரதான காரணமாக அமையும் - என்றுள்ளது. (ம -இ)


## ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 20 கொழும்புத்துறை வீதி 16A எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எம். விஸ்வலிங்கத்தின் உரிமையாளர் என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை பிரசித்த நொத்தாரிசு சொ.சண்முகலிங்கம் முகதாவில் 2015.01.29 ம் திகதி 4986 ம் இலக்கத்தில் நிறைவேறிய பிரகடனப்படுத்தல் உறுதி மூலம் "மணற்காதோட்டம்" எனும் பெயர்கொண்ட விஸ்தீரணம் நிலப்பரப்பு 4 குளி 5.27 அளவு கொண்ட ஆதனத்தை யாழ்ப்பாணம் உடையார் வளவு. தில்லையிட்டி. சுன்னாகம் எனும் இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை கிருபாரத்தினம் என்பவர் குறித்த ஆதனம் தனது மாதாவழி முதுசமாக வந்தடைந்தது என்றும் குறித்த ஆதனத்தை கடந்த 20 வருடங்களிற்கு மேலாக பேணிப் பராமரித்து ஆட்சி செய்து வருகிறேன் எனவும் வெளிப்படுத்தியுள்ளார். மேலும் குறித்த வெளிப்படுத்தலில் ஆதன அட்டவணையில் சுண்டுக்குளி கோவிற்பற்று. சுண்டுக்குளி இறையில் அமைந்துள்ளதும் 2014 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 13ம் திகதி உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.பரமேஸ்வரன் அவர்களால் 1967/2014 ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட நில அளவைப்படத்தில் துண்டு ஒன்று என சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலப்பரப்பு 4 குளி 5.27 விஸ்தீரணம் கொண்ட ஆதனமான "மணற்காதோட்டம்" எனும் பெயர் கொண்ட ஆதனம் 1937ம் ஆண்டளவில் இளையதம்பி பழனிவேல்பிள்ளை என்பவருக்கு அறுதி உறுதியாக எழுதப்பட்டு குறித்த இளையதம்பி பழனிவேல்பிள்ளை கொள்வனவு செய்திருந்தார் என்றும் 1979ம் ஆண்டு கார்த்திகை 01ம் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ்.சபாநாயகம் முகதாவில் 26ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியில் வடக்கெல்லை பழனிவேலுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் என குறிப்பிடப்பட்டுள்ளது. என்றும் இது யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் D383/55ல் பதியப்பட்டுள்ளது என்றும் குறித்த இளைதம்பி பழனிவேல்பிள்ளை மலேசியாவில் தொழில் புரிந்து வந்தார் என்றம் குறித்த ஆதனத்தின் எல்லைகளை பாதுகாத்து பேணி வந்தார் என்றும் அவ்வாதனத்தில் ஒரு சிறு வீடமைத்து அவர் வாழ்ந்து வந்தார் என்றும் குறித்த இளையதம்பி பழனிவேல்பிள்ளை உறுதிகள் ஆவணங்கள் ஏதும் எழுதாது வாரிசுகளுமின்றி மலேசியாவில் காலஞ்சென்று விட்டார் என்றும் அவரது குறித்த ஆதனம் அவரின் வாரிசான அவரது தாயாருக்கு வந்து சேர்ந்த முதுசமும் உரிமையும் உரித்தும் ஆகும் என்றும் குறித்த ஆதனத்தை அவரது தாயார் பராமரித்து ஆட்சி செய்து வந்தார் என்றும் குறித்த இளையதம்பி பழனிவேல்பிள்ளையின் தாயார் எனது மாதா செல்லத்துரை பெண் பொன்னம்மாவின் சகோதரி என்றும் அவர் பிற்காலத்தில் குறித்த எனது தாயாரின் பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் வாழ்ந்து வந்தார் என்றும் குறித்த ஆதனத்தை எனது மாதா பேணி பாதுகாத்துவந்தார் என்றும் குறித்த எனது மாதாவின் சகோதரி வேறு வாரிசுகளின்றி காலஞ்சென்றதும் அவரின் ஒரே ஒரு சகோதரியும் சட்டபூர்வ வாரிசுமான எனது மாதாவிற்கு சகோதரிவழி முதுசமாகவும் உரிதும் உரிமையுமாகவும் வந்து சேர்ந்து என்றும் குறித்த எனது மாதா செல்லத்துரை பெண் பொன்னமம்மா குறித்த ஆதனத்தை பேணி பாதுகாத்து ஆட்சிசெய்து வந்தார் என்றும் குறித்த எனது மாதா உறுதிகள் ஆவணங்கள் ஏதும் எழுதாது காலஞ்சென்றதும் அவரின் ஒரே ஒரு பிள்ளையும் சட்டபூர்வ வாரிசான எனக்கு வந்து சேர்ந்த மாதா வழி முதுசமும் உரிமையும் உரித்தும் ஆகும். என்றும் குறித்த ஆதனத்தை தற்போது நானே கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பேணி பாதுகாத்து பராமரித்து ஆட்சிசெய்து வருகிறேன் எனவும் வெளிப்படுத்தியுள்ளார்.

அதன் பின்னர் செல்லத்துரை கிருபாரத்தினம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 2016.06.09 வடி திகதி 15271ம் இலகக்த்தில் நிறைவேறிய அறுதி உறுதிமூலம் கோண்டாவில் வடக்கு கலைவாணி வீதி மகாதேவா தனராஜ் என்பவருக்கு குறித்த அதே அளவுகொண்ட ஆதனத்தை அறுதி விற்றுள்ளார்.

மகாதேவா தனராஜ் என்பவர் பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 2017.09.13ம் திகதி 15856 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் செல்லத்துரை கிருபாரத்தினம் என்பவருக்கு அதே விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை அறுதியாக கையளித்துள்ளார்.

மேலும் செல்லத்துரை கிருபாரத்தினம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 2017.09.13ம் திகதி 15857 ம் இலக்கத்தில் நிறைவேறிய நிபந்தனை அறுதி உறுதி மூலம் மேவின் சாள்ஸ் என்பவருக்கு அதே விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை நிபந்தனை அறுதி உறுதியாக கட்டுப்படுத்தியுள்ளார். அதன் பின்னர் மேவின் சாள்ஸ் என்பவர் பிரசித்த நொத்தாரிசு மு.றெமிடியஸ் முகதாவில் 2020.05.27ம் திகதி 2465 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் செல்லத்துரை கிருபாரத்தினம் என்பவருக்கு அதே விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை அறுதி விற்றுள்ளார்.

அடுத்து செல்லத்துரை கிருபாரத்தினம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு மு.றெமிடியஸ் முகதாவில் 2020.05.27ம் திகதி 2466 ம் இலக்கத்தில் நிறைவேறிய நிபந்தனை அறுதி உறுதி மூலம் கபரியேல்பிள்ளை அன்ரன் பொஸ்கோவும் பெண் அஜந்தா கிறிஸ்றிஸ்ரினாவும் என்பவருக்கு அதே விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை நிபந்தனை அறுதி உறுதியாக கட்டுப்படுத்தியுள்ளார்.

அடுத்து செல்லத்துரை கிருபாரத்தினம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு மு.றெமிடியஸ் முகதாவில் 2021.02.08 ம் திகதி 2637 ம் இலக்கத்தில் நிறைவேறிய ஆட்சி ஒப்படைத்தல் உறுதி மூலம் கபரியேல்பிள்ளை அன்ரன் பொஸ்கோவும் பெண் அஜந்தா கிறிஸ்றிஸ்ரினாவும் என்பவருக்கு அதே விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை ஆட்சி ஒப்படைத்தல் உறுதியாக கட்டுப்படுத்தியுள்ளார்

அதன் பின்னர் கபரியேல்பிள்ளை அன்ரன் பொஸ்கோவும் பெண் அஜந்தா கிறிஸ்றிஸ்ரினாவும் என்பவர்கள் பிரசித்த நொத்தாரிசு நி.கேசாந் முகதாவில் 2021.12.20 ம் திகதி 962 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் செல்லத்துரை கிருபாரத்தினம் என்பவருக்கு அதே விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை அறுதி விற்றுள்ளார்

மேலும் செல்லத்துரை கிருபாரத்தினமும் பெண் அகிலவல்லியும் பிரசித்த நொத்தாரிசு நி.கேசாந் முகதாவில் 2021.12.20 ம் திகதி 964 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் இல 54/4. ஆனைக்கோட்டை வீதி நவாலியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பரஞ்சோதிநாதன். பரஞ்சோதிநாதன் பெண் கலைமகள் அவர்களிற்கு நிலப்பரப்பு 2 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்திற்கு அறுதி உறுதி நிறைவேற்றியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லையில் சுண்டுக்குளி கோவிற்பற்று சுண்டுக்குளி இறை J/66 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட "மணற்காதோட்டம்" நிலப்பரப்பு 4 குளி 5.27. இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி.புஸ்பராசா அவர்களால் 08.12.2021ம் திகதி P 7092 ம் இலக்கத்தில் அளந்து தயாரிக்கப்பட்ட நில அளவைப் படத்தின் படி இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு இலா 4 குளி 5.06. இதில் துண்டு 2 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 2 இதற்கு எல்லைகள்

கிழக்கு - கனகேந்திரனுக்குரிய ஆதனம்
வடக்கு - கொழும்புத்துறை வீதி
மேற்கு - மீதி ஆதனம்
தெற்கு - மாணிக்கம் கந்தையாவின் ஆதனம் இதனடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை கணபதிப்பிள்ளை பரஞ்சோதிநாதன் மற்றும் பெண் கலைமகள் என்பவர்கள் தமது பெயரை எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கணபதிப்பதிள்ளை பரஞ்சோதிநாதன் மற்றும் பெண் கலைமகள் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதல்வர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்


## ஜப்பான் உதவிகளுக்கு அமைச்சரவை அனுமதி

பால் உற்பத்தித்துறையின் திறனை மேம்படுத்தும் திட்டம் மற்றும் இலங்கைக் கடற்படைக்கு உத்தியோகபூர்வ பாதுகாப்பு உதவியை வழங்குவதற்கான திட்டம் என்பவற்றுக்கு ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியைப் பெறுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பால் உற்பத்தித்துறையின் திறனை மேம்படுத்துவதற்காக 463 மில்லியன் ஜப்பானிய யென் மற்றும் இலங்கை கடற்படைக்கு உத்தியோகபூர்வப் பாதுகாப்பு உதவியை வழங்குவதற்காக 500 மில்லியன் ஜப்பானிய யென் என மொத்தம் 963 மில்லியன் ஜப்பானிய யென் (சுமார் 1.94 பில்லியன் ரூபா) மானியத்தை வழங்க ஜப்பான் அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.

பால் உற்பத்தித்துறையின் திறனை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ், விலங்குகள் உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் திறனை மேம்படுத்தத் தேவையான உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இலங்கை கடற்படைக்கு உத்தியோகபூர்வப் பாதுகாப்பு உதவியை வழங்கும் திட்டத்தின்கீழ், இலங்கைக் கடற்படையின் விசாரணை, அவதானிப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ட்ரோன்கள் வழங்கப்படவுள்ளன.

ஜனாதிபதியின் எதிர்கால ஜப்பான் பயணத்தில் இந்தத் திட்டங்கள் தொடர்பான பரிவர்த்தனைப் பத்திரங்கள் மற்றும் பிற ஆவணங்கள் கையெழுத்திடப்படவுள்ளன. இதுதொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. (எ-இ)


### விதை நெல் விற்பனைக்கு

இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்ட
அதிகூடிய விளைச்சலைக் கொண்ட 3 1/2 மாத
BG 34.6 விதை நெல் விற்பனைக்கு உண்டு.
077 659 2044

### யாழ் செந்தமிழன் ஸ்ருடியோ

(எங்கும் இல்லாத விலைக்கழிவுடன்)
திருமணம்-நீராட்டுவிழா-பிறந்தநாள் விழா
போன்ற அனைத்து நிகழ்வுகளையும்
சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள
எம்முடன் இணைந்திருங்கள்.
மேலதிக தொடர்புகளுக்கு
077 6405572 / 076 2345956

### வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும்
ஆயுள்வேத மருந்து கடைக்கு
கோயில் அபிசேக பொருட்கள்,
மருந்து சரக்குகள்
தெரிந்தவர்கள் தேவை.
077 711 1831


## புயல் அடித்தாலும் பாதிப்புக்கிடையாது

### ஆளுந்தரப்பு தெரிவிப்பு

கொழும்பு,செப்.18

நாட்டில் மீண்டும் சூறாவளி வரலாம் என்று கவி பாடும் உரிமை மஹிந்தவுக்கு உள்ளது. அதனால் எமக்கு (ஆளுங்கட்சிக்கு) எவ்விதத் தாக்கமும் ஏற்படப்போவதில்லை என்று பிரதி அமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்தார்.

நாட்டில் மீண்டும் மஹிந்த சூறாவளி அல்லது வேறு சூறாவளி ஏற்படக்கூடும் என்று மஹிந்த ராஜபக்ச எச்சரித்துள்ளமை தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதிகளை அரசாங்கம் பழிவாங்கவில்லை. மக்களால் வழங்கப்பட்டுள்ள ஆணையையே நடைமுறைப்படுத்திவருகின்றது. முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய உரித்துரிமை நீக்கமென்பது மஹிந்தவை இலக்குவைத்து முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல. ஏனைய முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் இது பொருந்தும். எனினும், இந்த விடயத்தை வைத்து வங்குரோத்து அரசியல்வாதிகள் அரசியல் நடத்துகின்றனர். ஒரு காலகட்டத்தில் மஹிந்த ஜன்னலில் தொங்கினார். தற்போது தந்தையை அமரவைத்து மகன் ஜன்னலில் தொங்குகின்றார். இப்படியான அரசியல் நாடகங்களே இடம்பெறுகின்றன. கடலில் அலை வருகின்றது, சூறாவளி வருகின்றது எனக் கவிதைகூறும் உரிமை மஹிந்தவுக்கு உள்ளது. அது அவருக்குரிய உரிமை. அதில் எமக்கு எவ்விதப் பிரச்சினையும் இல்லை - என்றார். (க-44)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், செப் .18

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வாரத்தையொட்டி இலவச மருத்துவ முகாம் கல்வயல் சண்முகானந்தா சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என தவிசாளர் வ. ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார். சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரின் உதவியுடன் மருத்துவ முகாமில் கண், நீரழிவு , இரத்த அழுத்தம் மற்றும் பொது மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன. (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவில்





| | |
|---|---|
| மலர்வு 10.05.1929 உதிர்வு 02.09.1992 | மலர்வு 25.09.1938 உதிர்வு 29.09.2024 |
| அமரர் சுப்பர் சின்னத்தம்பி | அமரர் சிவபாக்கியம் சின்னத்தம்பி |
| (ஓய்வுபெற்ற கிராமிய வங்கி முகாமையாளர்) | (ஓய்வுபெற்ற சிரேஷ்ட ஆசிரியர்) |
| திதி : சஷ்டி திதி (29.08.2025) | திதி : துவாதசி திதி (18.09.2025) |

உதிரம் ஈர்த்த எம் தந்தையே
உதரம் தந்த எம் தாயே
உம் பண்பான வாழ்வு
எமக்கோர் எடுத்துக்காட்டு
உயர்வான எண்ணம் கொண்ட
நீவீர் இருபேரும்
எம் மனங்களில் நிலைபெற்றுள்ளீர்கள்
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்

கைதடி தெற்கு,
கைதடி.
18.09.2025

தகவல்: பிள்ளைகள்
(மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை)

(CS 460741 E)

# மரண அறிவித்தல்

மண்ணக வாழ்வு
07 . 02 . 1941



விண்ணக வாழ்வு
13 . 09 . 2025

## லூர்த்தம்மா (லூட்ஸ்) கருணாதிராசா (இளைப்பாறிய ஆசிரியை)

யாழ் வசாவிளானை பிறப்பிடமாகவும், Scarborough கனடாவை வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை லூர்த்தம்மா (Lourdes) கருணாதிராசா அவர்கள் 2025.09.13ம் திகதி சனிக்கிழமையன்று இறைவன் பாதம் சென்றடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களானா இளைப்பாறிய அதிபர் இராயப்பு இராஜசிங்கம்-தங்கம்மா தம்பதியரின் அருமைப் புதல்வியும், சிங்கராயர்-முத்தம்மா தம்பதியரின் அன்பு மருகளும், இளைப்பாறிய ஆசிரியர் சிங்கராயர் கருணாதிராசா (செல்லக்கிளி-மாஸ்ரர்) அவர்களின் ஆருயிர் மனைவியும், அருட்தந்தை ஜேம்ஸ் சிங்கராயர் (கனடா) Scarborough கனடாவைச் சேர்ந்தவர்களான லிங்ரன், நெல்சன், வில்சன் மற்றும் லூசியா கருணாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், கனடாவைச் சேர்ந்தவர்களான அமிர்தா, இன்பராஜினி, சுரேன் Alphonse ஆகியோரின் அன்பு மாமியாரும், Kiara, Nilesh, Renate, Tylan, Lianson, Rashlikka, Ethan, Snatha, Katan ஆகியோரின் அன்புப் பேத்தியும், றெஜினம்மா (கொழும்பு), திரேசம்மா (கனடா), தேவநேசம் பேர்ணடேத் (வேவி-இத்தாலி) காலஞ்சென்றவர்களான இம்மானுவேல், லூயிஸ் அல்பிரட், பிலோமினம்மா, அருட்தந்தை பீற்றர் துரைரெட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இளைப்பாறிய ஆசிரியை மரியரெட்ணம் துரைசிங்கம் (கனடா), நேசமலர் லூயிஸ் அல்பிரட் (கனடா), காலஞ் சென்றவர்களான இராஜேந்திரம், பரராஜசிங்கம், எட்வேட்ராஜா, விக்டர் இம்மானுவேல், மேரி திரேசா சவுந்தரநாயகி, புஸ்பரத்தினம், ஜெயனாதிராசா, லூர்துநாயகி, ஜெபனாதிராசா, தர்மராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், அருட்சகோதரி வேஜி (Holy Cross - Jaffna), அருட்தந்தை எட்விநாதன் (St. Patrick's College, Jaffna) ஆகியோரின் அன்பு சிறிய தாயாரும், அருட்தந்தை அன்றூ தவராஜசிங்கம் (Canada) அவர்களின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (20.09.2025) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு St Rose of Lima Church இல் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அதன் பின்பு Christ the King Catholic Cemetery இல் அமைந்துள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வசாவிளான் கார்மேல் மாதா ஆலயத்தில் (19.09.2025) வெள்ளிக்கிழமை மாலை 05.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

# 'விருந்தோம்பல் தொழிலாளர் படை' தொழிற்பயிற்சித் திட்டம் ஆரம்பிப்பு

கொழும்பு, செப்.18

**2030 ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு வருடாந்தம் 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கான அதன் மூலோபாய இலக்குகளை அடைந்துகொள்வதற்கு 'விருந்தோம்பல் தொழிலாளர் படை' நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.**

இலங்கை சுற்றுலா மற்றும் விடுதி முகாமைத்துவ நிறுவனம் தேசிய தொழிற் கல்வித் தகைமையின் (NVQ 3) 3ஆம் மட்டத்தில், ஆறு (6) மாதங்கள் கொண்ட ஒரு தொழிற்பயிற்சித் திட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இந்தப்பயிற்சித்திட்டமானதுநுண், சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான விருந்தோம்பல் துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு, கோட்பாட்டு அறிவு மற்றும் நடைமுறைப் பயிற்சியை வழங்குவதற்காக நடத்தப்படவுள்ளது. பயிற்சித் திட்டத்தின் முதற்கட்டத்தில் சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இந்த நிகழ்ச்சித் திட்டம் 2025 ஆம் ஆண்டில் தொடங்கி 2026 ஆம் ஆண்டில் நிறைவடையும். இரண்டாம் கட்டத்தில் 80 ஆயிரம் பேருக்கு பொதுதனியார் பங்காண்மைகள், நிறுவனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் இணை அனுசரணை நிதியத்தினூடாகவும் பயிற்சி அளிக்கப்படும்.

அதற்கமைய சுற்றுலா அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

# நாடு முழுவதும் அமைக்கப்படவுள்ள பல்வகைப்போக்குவரத்து நிலையம்



கொழும்பு, செப்.18

2029ஆம் ஆண்டுக்குள் நாடு முழுவதும் சுமார் 50 பல்வகைமைப் போக்குவரத்து நிலையங்களை நிறுவுவதே அரசாங்கத்தின் இலக்கு எனப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையில் நடைபெற்ற கொழும்பு மத்திய பேருந்து நிலையப் புதுப்பித்தல்திட்டத்தின் ஆரம்ப விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2026ஆம் ஆண்டுக்குள் கொழும்பில் இதுபோன்ற 15 பேருந்து நிலையங்கள் அமைக்க எதிர்பார்த்துள்ளோம். பயணிகளுக்கு எளிதாக பஸ், ரயில் மற்றும் முச்சக்கரவண்டிச் சேவைகளை ஒரே இடத்திலிருந்து வழங்கும்வகையில் புதிய நிலையங்கள் வடிவமைக்கப்படும். கொழும்பு உள்ளிட்ட பல முக்கிய மான பேருந்து நிலையங்களை மேம்படுத்த அமைச்சு செயற்பட்டு வருகின்றது. போக்குவரத்துத் துறையை மேம்படுத்தாவிட்டால் நாம் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது - என்றார். (எ-இ)

# நான்காம் ஆண்டு நினைவு

## அமரர் கிட்டிணன் பரஞ்சோதி

(ஓய்வு பெற்ற ஆண் தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)

*திதி : துவாதசி* (18.09.2025)



பிறப்பு 16.02.1943 இறப்பு 03.09.2021

அன்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே
எம் வாழ்வுக்கு ஒளியூட்டிய வட்டநிலவே
ஏணியாக நின்று எம்மை ஏற்றி விட்டவரே......
தோணியாக நின்று துறைமுகம் காட்டியவரே.....
வாழ்வுக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டியவரே
இன்னும் சில காலம் எங்களோடு வாழ மறந்ததேன்?
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வாழ்ந்த எங்கள் அன்புத்தெய்வம்
அணைந்து ஆண்டுகள் நான்கு உருண்டோட
எங்கள் மனம் உங்களை தேடி நிற்கிறது
துவண்டு நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
இக்கிரானை
கந்தரோடை, சுன்னாகம்.

(CS/30272) JJ-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவெளியில் மீண்டும் ரணில்!

கொழும்பு, செப். 18

ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கைது நடவடிக்கைக்குப் பின்னர் முதல்முறையாக பொதுநிகழ்வொன்றில் கலந்து கொண்டார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்விலேயே அவர் கலந்துகொண்டதும், பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுடன் நீண்டநேரம் கலந்துரையாடினார். (ம)

## மரண அறிவித்தல்

### கந்தையா இரத்தினம்



விரவத்தனை வல்வெட்டியை பிறப்பிடமாகவும், கல்வியங்காடு இல 43 இராஜ வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இரத்தினம் அவர்கள் நேற்று (17.09.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், சிவபாக்கியம், பகவதி, தங்கத்துரை, ராஜினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோபாலரத்தினம், தேவிகா, ரவீந்திரன் ஆகியோரின் தாயாரும், திலகவதி, கனகசபை, லலிதா ஆகியோரின் மாமியும், வர்ஷன், மீனா, தர்ஷன், தர்ஷனா, நிருஜன், கிருஷிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.09.2025) வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் கல்வியங்காடில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மனி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
075 392 2147
021 221 7426

## மரண அறிவித்தல்

தோற்றம்
10.10.1955



மறைவு
17.09.2025

### ஆண்டிஜயா யோகேஸ்வரி

வித்திராயன் தெற்கினை பிறப்பிடமாகவும், விளையாட்டரங்க வீதி கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட ஆண்டிஜயா யோகேஸ்வரி அவர்கள் நேற்று (17.09.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஜயம்பிள்ளை (முன்னாள் கிராமசபைத்தலைவர் - செம்பியன்பற்று) - இராசம்மா தம்பதியரின் மருமகளும், ஜயம்பிள்ளை ஆண்டிஜயா அவர்களின் அன்பு மனைவியும், பத்மினி, குமுதினி (சமுர்த்தி உத்தியோகத்தர் - கோப்பாய்), குபேந்திரன் (அவுஸ்திரேலியா), பாமினி (ஆசிரியை யா/ நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்பரஞ்சன் (R.K Fancy யாழ்ப்பாணம்), மனோரஞ்சன் பிரியதர்சினி (கமநல சேவைகள் திணைக்களம் - புங்குடுதீவு), ஜெயசீலன் (ஆசிரியர் யா/ அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற பொன்னம்மா, சின்னப்பு, பாக்கியம், கமலாசன், யோகேஸ்வரி, தவராசா, சுகநேசன் ஆகியோரின் மைத்துனியும், யோகநாயகி, ஏகாம்பரம், பொன்னுத்துரை, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் நித்தியானற்தம், யோகராணி, யோகலட்சுமி, ஒப்பிலாமணி, பேரின்பநாதன் (தேசிங்கு) ஆகியோரின் சகோதரியும், பிரவீன், தினேஸ், திவ்யா, கரிஸ்ராம், விஷ்னுராம், ஜெயலக்சி, இலக்கியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2025) வியாழக்கிழமை முற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து வத்திராயன் தெற்கில் அமைந்துள்ள அன்னாரின் வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக் கிரியைக்காக வத்திராயன் இரண்டாம் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்



## ‘இவர்கள் மகாத்மாக்கள்’ நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.18

சுயாதீன ஊடகவியலாளரும், எழுத்தாளருமான கணபதி சர்வானந்தா எழுதிய இவர்கள் மகாத்மாக்கள் நூல் வெளியீடு, இணுவில் அறிவாலய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் முன்னாள் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் நூலை வெளியிட்டார்.

நூலாசிரியர் நிகழ்வில் கலந்துகொண்ட பலராலும் கௌரவிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து உளவளத் துணையாளர் நா.நவராஜ், கவிஞர் நாக.சிவசிதம்பரம் ஆகியோர் நூல் தொடர்பான கருத்துரைகளை ஆற்றினர். (க-66)

## பொருளாதார வளர்ச்சியை 6 வீதமாக உயர்த்த இலக்கு

கொழும்பு,செப்.18

அடுத்த வருடம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை 6 வீதமாக உயர்த்த நிர்ணயித்துள்ளோம் என்று தொழிலாளர் அமைச்சர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சுதந்திரத்துக்குப் பின்னர் நாடு சந்தித்த மிகமோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டுவரும் நேரத்தில் முதலீட்டாளர்களும், இலங்கையர்களும் நம்பிக்கையுடன் இருக்கவேண்டும்.


கடந்தவருடம் இலங்கை 5 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைந்தது. ஆனால் வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தாமதத்தால் அரசாங்க செலவினம் குறைந்தது.

எனவே இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி 4 முதல் 4.5 சதவீதமாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்த வருடம் இலங்கை 5 முதல் 6 சதவீதப் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடைய வேண்டும். அடுத்த ஐந்து வருடங்களில் வளரும் நாடுகள் பராமரிக்கும் பொருளாதார வளர்ச்சியை இலங்கை பராமரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது - என்றார். (க-இ)

## கந்தர்மடத்தில் சிரமதானம்

யாழ்ப்பாணம்,செப்.18

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் மாநகரசபையின் 2 ஆம் வட்டாரமான கந்தர்மடம் வடமேற்கில் நேற்று சிரமாதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. கலட்டிச்சந்தியில் இருந்து நாச்சிமார் கோவில் வரையிலான சேர்.பொன்.இராமநாதன் வீதியின் இருமருங்கிலும் காணப்பட்ட குப்பைகள், களைகள், பாத்தீனியம் என்பன அகற்றப்பட்டன. வட்டாரத்தின் உறுப்பினர் ப.தர்சானந் தலைமையில், பிரதேசத்தின் கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கலட்டி கலைவாணி சனசமூக நிலைய நிர்வாகிகள், பொதுமக்கள் சிரமதானத்தை முன்னெடுத்தனர். (க)



நீர்வேலி தெற்கு முருகையா கோயிலில் கந்தபுராண படிப்பு நிறைவு நிகழ்வும் திருக்கல்யாண உற்சவமும் இடம்பெற்று தொடர்ந்து சுவாமி வீதிவலம் வந்து அருட்காட்சியளித்தார். (ச-17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்.மாவட்டத்தில் முதல்முறையாக

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் இ-சேவை விழிப்புணர்வு!



**யாழ்ப்பாணம், செப்.18**

**யாழ். மாவட்டத்தில் முதல்முறையாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் இ-சேவைகள் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு நேற்றுமுன் தினம் நெடுந்தீவில் இடம்பெற்றது.**

தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூலோபாயத்திட்டத்துக்கு அமைவாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்கவின் தலைமையில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில் நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை, நெடுந்தீவு மகா வித்தியாலயம் மற்றும் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 10,11 மற்றும் உயர் தர மாணவர்கள் பங்குபற்றினர்.

தொடர்ந்து நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் அந்தப் பிரதேச செயலகத்துக்கு ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 32 இளைஞர்கள், யுவதிகள் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டதோடு பயிற்றுவிப்பாளர் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளில் யாழ்.மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் இ. சசீலன், யாழ் மாவட்டத் தேர்தல்கள் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் தலைமைச் செயலக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

தொடர்ந்து யாழ். மாவட்ட ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளிலும் பல பாடசாலைகளிலும் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவின் இ-சேவை மேலும் விஸ்தரிக்கப்பட வுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-26)


# Invitation for Bids (IFB)

## VENGALACHEDDIKULAM PRADESHIYA SABHA

## Acceleration of resettlement activities in northern & eastern province -2025

1. The Chairman, Divisional Procurement Committee (Div.PC), on behalf of Vengalacheddikulam Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the work(s) listed in the table below.

| S. No | Bid No. | Source of Fund | Name of the Work | Estimated Civil Cost (LKR in. Mn) | CIDA Grade Required | Required Bid Security | | Contract Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount (Rs.) | Validity Period | |
| 1 | ARA/NP/VAV/VCKPS/2025/W/01 | ARA | Construction of Pavatkulam unit 2 internal road 2 (NVVPE 067) (Metaling and Tarring) | 8.32 | C8 & Above(Highway) | 84,000.00 | 15.01.2025 | 63 |
| 2 | ARA/NP/VAV/VCKPS/2025/W/02 | ARA | Construction of Maniyarkulam second cross road (NVVPE030) (Metaling and Tarring) | 8.33 | C8 & Above(Highway) | 84,000.00 | 15.01.2025 | 63 |

2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB) Procedure.**
3. Interested eligible bidders may obtain further information from Secretary, **Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road [Email: cheddips@gmail.com] from 09.00 Hrs to 15.00 Hrs** and inspect the bidding documents at the address **Secretary, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road, Cheddikulam.**
4. Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the **"Schedule/Bidding Data"** of the Procurement Document for works and goods.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address **Secretary, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road Cheddikulam.** from **18.09.2025 until 01.10.2025 from 09.00 Hrs to 15.00 Hrs.** Upon payment of a non-refundable fee of **Two thousand five hundred Rupees ( 3500.00). The method of payment will be by cash.**
6. Bids must be delivered to the address **Chairman, Divisional Procurement Committee, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar-Madawachchi Road, Cheddikulam on or before 2nd October 2025 and 14.00 Hrs**. Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.
7. All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.
8. The pre-bid meeting will be held on **25.09.2025 at 14.00 Hrs** at the Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar - Madawachchi Road, Cheddikulam.

The address (es) referred to above is (are):

Chairman,
Divisional Procurement Committee.
Vengala cheddikulam Pradeshiya Sabha,
Mannar- Madawachchi Road, Cheddikulam
[Telephone No: **024 2260914** Fax No: **024 2260913**]
**18.09.2025**

(CR 46075) E




# தூர்வாரப்பட்டது குஞ்சர்துரவு குளம்

யாழ்ப்பாணம், செப்.18

சுமார் 60 வருடங்களுக்கு மேல் கவனிப்பாரற்று இருந்த சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் குஞ்சர் துரவுக்குளம் நகராட்சி மன்றத்தினால் தூர்வாரப்பட்டுள்ளது.

சுமார் 60 வருடங்களுக்கு மேலாக தூர்வாரப்படாமல் நகரசபையின் கண்காணிப்பில் இருந்து விடுபட்ட கிராமத்தின் அடையாளமான குஞ்சர்துரவுக் குளத்தைத் தூர்வாரிப் பாதுகாக்குமாறு கிராமமக்கள் நீண்டகாலமாக நகரசபையிடம் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில் உள்ளூராட்சி வாரத்தில் நகரசபைத் தவிசாளர் ஸ்ரீ.பிரகாஷ், உபதவிசாளர் ஞா.கிஷோர், செயலாளர் எஸ்.நிசான் ஆகியோர் கண்காணிப்பில் அண்மையில் தூர்வாரப்பட்டது. (ச-28)

# மாளிகைப்பிட்டி கிராம உள்ளக வீதி புனரமைப்பு

மன்னார்,செப்.18

நானாட்டான் பிரதேசசபைக்கு உட்பட்ட ஆத்திக்குளி மாளிகைப்பிட்டி கிராம உள்ளக வீதியின் புனரமைப்புப் பணிகள், நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டன.

800 மீற்றர் நீளம் கொண்ட இந்த வீதிக்கு, வட மாகாண வீதி அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 31.7 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. புனரமைப்புப் பணியின் ஆரம்ப நிகழ்வில், நானாட்டான் பிரதேசசபை தவிசாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர், நானாட்டான் பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் கிராமமக்கள் ஆகியோர் பங்கேற்றனர். (க-56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையைப்...

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்திய பிரதிப்பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையின் சாரம்சமாவது:-

உலகளாவிய ரீதியில் மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய பல அட்டூழியங்கள் குறித்த ஞாபகங்கள், சில வருடங்களில் வேறு புதிய மனித உரிமைமீறல் சம்பவங்களால் மாற்றி எழுதப்படும். ஆனால் மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் அதனால் ஏற்பட்ட துயரம் என்பது முடிவற்றதாகும். தீர்வளிக்கப்படாத குற்றங்கள் அதனையொத்த எதிர்கால மீறல்களுக்கான முன்மாதிரியாகத் திகழ்கின்றன.

இலங்கை அரசாங்கத்தால் 2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டது. அதன் விளைவாக ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். ஐக்கிய நாடுகள் சபையால் கண்டறியப்பட்டதன் பிரகாரம் போரில் ஈடுபட்ட இருதரப்பினராலும் சட்டங்களுக்குப் புறம்பான விதத்தில் மனிதகுலத்துக்கு எதிராக மிகமோசமான குற்றங்கள் இழைக்கப்பட்டன. இருப்பினும் அவை இன்றளவிலே இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் சிலரால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் நிகழ்த்தப்பட்ட அட்டூழியங்களுக்கான எந்தவொரு எதிர்விளைவும் இல்லாததன் காரணமாக இது சாத்தியமாகியிருக்கின்றது.

இலங்கையில் இதுவரை ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் சர்வதேச சட்டத்தை நிலைநிறுத்துவதாக வாக்குறுதியளித்துவிட்டு, அதிலிருந்து விலகிச் செயற்பட்டு வந்திருப்பதன் மூலம், எதனைச் செய்தாலும் பின்விளைவுகளின்றி மீண்டுவிடலாம் என்பதைக் காண்பித்து வந்திருக்கின்றன. ஆகையினாலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை பொறுப்புக்கூறலைத் தொடர்ந்து வலியுறுத்துவதுடன் இலங்கையால் நிகழ்த்தப்பட்ட சர்வதேசக் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டுவதற்குரிய ஆணையை மீளப் புதுப்பிக்கவேண்டும்.

இலங்கையில் சுமார் 26 வருடகாலமாக நீடித்த உள்நாட்டுப் போரின்போது பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், சட்டவிரோத படுகொலைகள், வலிந்து காணாமலாக்கப்படல்கள் என்பன உள்ளடங்கலாக மிகமோசமான மீறல் குற்றங்கள் இழைக்கப்பட்டன. இறுதிக்கட்டப்போர் இடம்பெற்ற சில மாதங்களில் எஞ்சியிருந்த விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களும், தமிழ் பொதுமக்களும் இலங்கை இராணுவத்தினால் மிகக்குறுகிய பகுதிக்குள் சுற்றிவளைக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகள் பொதுமக்களை மனிதக்கேடயங்களாகப் பயன்படுத்திய அதேவேளை, இலங்கை இராணுவம் மனிதாபிமான உதவிகள் உட்செல்வதைத் தடுத்ததுடன் குறித்த சில பகுதிகள் மீது வான் மற்றும் ஆட்டிலறித் தாக்குதல்களை நடத்துவதற்கு முன்னர் அவற்றை 'யுத்த சூனிய வலயங்களாக' அறிவித்தது. மருத்துவ சேவை வழங்கல்கள் தொடர்ந்து இலக்குவைக்கப்பட்டன.

இலங்கையில் 16 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்து, இன்னமும் தண்டிக்கப்படாமல் உள்ள இச்சம்பவங்கள், இன்றளவிலே காஸாவில் நிகழ்த்தப்படும் மீறல்களுக்கும், அங்கு பிரயோகிக்கப்படும் உத்திகளுக்குமான முன்னோடியாக உள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் இன்றியமையாததாகும். அது இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மாத்திரமன்றி, உலகெங்கிலும் தொடரும் தண்டனைகளில் இருந்து விடுபடும் போக்கை சவாலுக்கு உட்படுத்துவதற்கு அவசியமாகும் - என்றுள்ளது. (அ-ம)

## கஞ்சா...

நாவாந்துறை - மண்பிட்டிப் பகுதியில் நீண்டகாலமாக கஞ்சா கலந்த மாவா விற்பனையில் ஈடுபட்டுவந்த நபரொருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குப் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போதை தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரிடம் இருந்து 470 கிராம் கஞ்சா கலந்த மாவா மீட்கப்பட்டுள்ள நிலையில், அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

## இனப்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பில் புதியதொரு தீர்மான வரைவை கனடாவின் இணையனுசரணையுடன் பிரிட்டன் சமர்ப்பித்துள்ளது. 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய வரைவு தொடர்பில் தற்போது விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான விவாதம் ஒன்றிலேயே, 'இலங்கையில் இனப்பிரச்சினைகள் இடம்பெறவில்லை' என்று இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இனங்களுக்கு இடையிலான மோதல்கள் இடம்பெறவில்லை. மாறாகப் பயங்கரவாத மோதல்தான் இடம்பெற்றது. தற்போது அது தோற்கடிக்கப்பட்டுள்ளது. எனவே, இலங்கை தொடர்பான விவாகரங்களுக்காக பொறிமுறைகள் எவையும் உருவாக்கப்பட வேண்டிய அவசியங்கள் எழவில்லை. தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ள குற்றவியல் நீதிக்கட்டமைப்பின் ஊடாக இந்த விடயத்தை அணுக முடியும் என்றார்.

அத்துடன், பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம், புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம், நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தைத் திருத்தியமைத்தல் என்பன தொடர்பிலும் அவர் விளக்கமளித்துள்ளார். (அ-எ-இ)

## பெரும்...

இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகள் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளன. இதுவரை 240 என்புத் தொகுதிகள் அவதானிக்கப்பட்ட நிலையில், அவற்றில் 239 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்ட நிலையில், மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று பலரும் வலியுறுத்தி வருகின்றனர். இவ்வாறான பின்னணியில், இன்றைய வழக்கு விசாரணை பெரிதும் எதிர்பார்க்கப்படும் விடயமாக அமைந்துள்ளது.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, 'செம்மணிப்புதைகுழியில் தொடர்ச்சியான அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க வேண்டும்' என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் சுட்டிக்காட்டியிருந்தார். இதையடுத்து, மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளுக்கான பட்ஜெட்டை சமர்ப்பிக்குமாறு நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## அஞ்சலிக்கச்...

சூழ்ந்துகொண்டு அவரை அஞ்சலிக்க விடாமல் தடுத்ததுடன் உடனடியாகத் திரும்பிச் செல்லுமாறு வலியுறுத்தினார்கள். இறுதிவரை அவர்கள் சமாதானம் ஆகாததால் அமைச்சர் சந்திரசேகர் அவ்விடத்தை விட்டு விலகிச் சென்றார்.

திலீபனுக்கான அஞ்சலி நிகழ்வு பொதுவானது. அங்கு யார் வேண்டுமானாலும் அஞ்சலி செலுத்தலாம். அத்துடன், அமைச்சர் ஒருவர் திலீபனை அஞ்சலித்தால், அது 'திலீபன் ஓர் அஹிம்சைப் போராளி' என்பதற்கான ஆதாரமாகவும் அடையாளமாகவுமே அமையும். அத்துடன், எதிர்காலத்தில் அஞ்சலி நிகழ்வுகளுக்கு நீதிமன்றங்கள் மூலம் தடைபோட பொலிஸார் எத்தனித்தால், இவ்வாறான சம்பவங்கள் நீதிமன்றத்தில் தமிழர் தரப்புக்கான பிடிமானங்களாக மாறவும் வாய்ப்புகள் உள்ளன. இவ்வாறிருக்கையில் பரந்துபட்ட பார்வை இல்லாமல் தொலைநோக்குச் சிந்தனை இல்லாமல் இராஜதந்திர அணுகுமுறை இல்லாமல் அமைச்சரை வெளியேற்றிய ஏற்பாட்டாளர்களின் செயற்பாட்டுக்குப் பலரும் தமது கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர். (அ-ம-26)

## போக்குவரத்துக்...

குழுக்கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இன்று இடம்பெறவுள்ளது. பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்கள் அண்மைக்காலமாக இடம்பெற்றுவந்தன. இதைத் தொடர்ந்தே, இன்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இதில், வடமராட்சியில் நிலவும் போக்குவரத்துப் பிரச்சினை, சட்டவிரோத மணல் அகழ்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-26)

## இலங்கைக்கு...

னார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு நாடு பொருளாதார வீழ்ச்சிக்குப் பிறகு ஒரு தசாப்த காலத்தை இழக்கிறது. ஆனால் தற்போதைய அரசாங்கம் அந்த தசாப்தத்தின் பாதி அல்லது அதற்கும் குறைவான காலத்துக்குள் இந்த நிலைமையை மாற்ற உறுதிபூண்டுள்ளது. இன்று ஆரம்பிக்கப்பட்ட அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் ஒரு தனித்துவமான சந்தர்ப்பம். ஒரு நாள் கூட தாமதிக்காமல், உரிய நேரத்தில் பணிகளை நிறைவு செய்து ஒப்படைக்குமாறு அனைவரையும் வலியுறுத்துகிறேன்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை உட்கட்டமைப்பு மேம்பாட்டுடன் தொடர்புடைய விடயமாக மட்டும் மட்டுப்படுத்து விடமுடியாது. நாட்டில் பொருளாதார மற்றும் சமூக உறுதித்தன்மையை உருவாக்க அரசாங்கம் பல கோணங்களில் செயற்பட்டு வருகின்றது. இதனால் பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எட்டப்பட்டுள்ளன.

நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு மீட்டெடுப்பது என்பதை நாம் கவனமாக ஆராய வேண்டும். இந்த நெருக்கடி எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதை ஆராயவேண்டும். 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட சமூக அவலம் தற்செயலாக உருவாக்கப்படவில்லை. அதனுடன் தொடர்புடைய பல முக்கிய காரணிகளும் சிக்கல்களும் உள்ளன. இலங்கையில் மீண்டும் இதுபோன்ற நெருக்கடி ஏற்படாதவாறு இந்த நாட்டைக் கட்டியெழுப்ப நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று மக்களுக்கு உறுதியளிக்கிறேன் - என்றார். (அ-ம)

## கம்மன்பிலவின்...

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தன்னைக் கைதுசெய்வதற்குத் திட்டமிட்டுள்ளனர் என்றும் இந்தக் கைது நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துமாறும் முன்னாள் அமைச்சர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை நேற்றுப் பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு, மனுமீது எதிர்வரும் 24ஆம் திகதி விசாரணை நடத்தத் தீர்மானித்துள்ளது. (அ-ம)

## யாழ். நகரில்...

நல்லூரில் அமைந்துள்ளது. குறித்த கட்டடத்தின் முன்பக்கத்தின் ஒரு பகுதி இடிந்து விழும் நிலையில் காணப்பட்ட நிலையில் அதற்கு முட்டுக் கொடுத்துக் கம்பிகள் நடப்பட்டிருந்தன. அத்துடன் மந்திரிமனையைப் புனரமைக்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றுப் பெய்த மழை காரணமாக மந்திரிமனையின் ஒரு பாகம் இடிந்து விழுந்துள்ளது.

2011ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி மூலம், நல்லூர் மந்திரிமனை தொல்பொருள் சின்னமாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**(மேலதிக விவரங்கள் பட்சியில்)**

(அ-ம-26-66-17-20)

## இராமநாதபுரத்தில்...

துப்புரவு செய்தபோதே இந்த ஷெல் அவதானிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர், சம்பவம் தொடர்பில் இராமநாதபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





படங்கள் ஐ. சிவசாந்தன்

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் நிறுவன ஊழியர்கள் 20 பேர் தங்குவதற்கு வீடு வாடகைக்கு தேவை.


தொடர்பு: 077 959 2628

**வீடு வாடகைக்கு உண்டு**

கொக்குவிலில் 3 அறைகள், சமையலறை, நவீன வசதிகளுடன் கூடிய குளியலறையுடன் வீடு வாடகைக்கு உண்டு.

CS/302739 J-1

தொடர்பு:- 077 541 7812



# நல்லூரில் தியாகதீபம் திலீபன் 3ஆம் நாள் நினைவேந்தல்

யாழ்ப்பாணம் செப்.18

இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துப் பன்னிரெண்டு நாட்கள் நீராகாரம் கூட இன்றி அகிம்சை வழியில் உண்ணா விரதமிருந்து உயிர்நீத்த தியாகதீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்த லின் மூன்றாவது நாள் நிகழ்வுகள் நேற்றுப் புதன்கிழமை காலை 9 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத்தூபியடியில் தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் கடைப்பிடிக்கப்பட்டது. இதன்போது சுடரேற்றி, ஒரு நிமிட அக வணக்கம் செலுத்தப்பட்டுத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியிலும் திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-66)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ் கோப்பாய் ராசபாதை வீதியில், Training college முன்பாக 18 பரப்பு காணி 20 அடி பாதையுடன் இரண்டு இரண்டு பரப்பாக பிரித்து விற்பனைக்கு உண்டு.

- குடியிருப்பு சூழல்
- நல்ல நீர்க் கிணறு
- செம்மண் தறைக்காணி
- பிரதான போக்குவரத்து சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக.

பார்வையிடும் நேரம்:- காலை 6.00 - மாலை 6.00 வரை

தொடர்புகளுக்கு:- விமல்

076 755 8606, 077 638 5683

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் 11 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நல்லூர் குறுக்கு வீதி முகப்புடன், யாழ் மாநகர சபை முன் வீதி.
- நல்லூர் ஆலயத்தில் இருந்து 500m தூரம்.
- பருத்தித்துறை வீதி 150m, செட்டித்தெரு 50m.
- நாவலர் வீதி 150m, கச்சேரி நல்லூர் வீதி 100m.

இரண்டு பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

ஒருபரப்பின் விலை - 30 000 000 (மூன்று கோடி)

நல்ல சுற்றுச் சூழல்.

அனைத்து ஆவணங்களும் சரியாக உள்ளது.

தொடர்புக்கு - 077 468 3354, 077 288 0152
076 860 2770

Golden Real Estate (Pvt)Ltd



உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள், பொதுமக்களின் துவிச்சக்கர வண்டிகளுக்கு ஒளிரூட்டு ஸ்டிக்கர் ஒட்டும் செயற்பாடு வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபையினால் புதுக்குளம் மகாவித்தியாலயத்துக்கு முன்பாக கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ச-25,110)

# மஞ்சள், இஞ்சிக்கு காப்பீட்டுத் திட்டம்!

கொழும்பு, செப். 18

வணிக ரீதியாகவும் ஏற்றுமதி நோக்கங்களுக்காகவும் பயிரிடப்படும் மஞ்சள் மற்றும் இஞ்சி சாகுபடிகளுக்கு சிறப்புக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக வேளாண் மற்றும் விவசாயிகள் காப்பீட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

விவசாயிகள் தங்கள் இஞ்சி சாகுபடிக்கு ஏக்கருக்கு 2 இலட்சம் ரூபா வரை காப்பீட்டுத் தொகையைப் பெறலாம். 7 வீதக் காப்பீட்டுத் தொகையை செலுத்துவதன்மூலம், இயற்கை பேரழிவுகள், நோய்கள், பூச்சிச் சேதம் மற்றும் காட்டு யானைச் சேதங்களுக்கு காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.

மேலும்,மஞ்சள் சாகுபடிகளைப் பாதுகாக்க ஏக்கருக்கு 7 இலட்சம் ரூபா வரை காப்பீட்டுத் தொகையைப் பெறமுடியும் எனவும் அதன் தலைவர் பிரேமசிறி ஜசிங்கராச்சி தெரிவித்தார். (ச-இ)

# இராணுவமுகாம்களில் ஆயுதங்கள் கணக்கெடுப்பு

கொழும்பு, செப். 18

நாடு முழுவதும் உள்ள இராணுவமுகாம்களில் களஞ்சியப்படுத்தபட்டுள்ள அனைத்து ஆயுதங்களையும் கணக்கெடுக்கும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் வருண கமகே தெரிவித்துள்ளார்.

கணக்கெடுப்பு முடிந்த பின் எந்த வகை ஆயுதங்கள் காணாமற்போயுள்ளன என்பதைத் துல்லியமாகக் கண்டறியமுடியும். நாட்டில் இடம்பெற்றுவரும் திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் பாதுகாப்புத் தரப்பினருக்குத் தொடர்பு உண்டு என்றும் இராணுவமுகாம்களில் காணப்படும் ஆயுதங்கள் குற்றச் செயல்களுக்காகப் பயன்படுத்தப்படுவதாகவும் குற்றஞ்சுமத்தப்பட் டுள்ளது.

இந்த நிலையில் இராணுவமுகாம்களில் காணப்படும் ஆயுதங்கள் தொடர்பில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அறிக்கையிடப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# புரட்டாதிச் சனி விரத வழிபாடு

யாழ்ப்பாணம், செப்.18

முதலாவது புரட்டாதிச் சனி விரத வழிபாடுகள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாவுள்ளன. அன்றைய தினம்அனைத்துசிவாலயங்களிலும் சிறப்புப் பூஜை வழிபாடுகள் இடம் பெறும்.

நவக்கிரகங்களுக்கு வழிபாடுகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து எள்ளு எண்ணெய் எரிக்கும் நிகழ்வு இடம்பெறும். (ச-25, 17)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org